DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM

Calender

Miscellaneous Case No CC 108/14

Priliminary Register

Sessions

Prosecution PW 4

Deposition of witness for Defence

Court

Name Krishnamoorthy

Father's Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20

18.03.2019 முதல் விசாரணை:

நான் சுவாமி மல்லம்பட்டியில் வசித்து வருகிறேன். நான் டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு எழுதப்படிக்கத் தெரியும். 28.06.2013ம் தேதி நான் இரு சக்கர வாகனத்தில் ஆலம்பட்டி அருகில் சென்று கொண்டிருந்த போது போலிசார் விபத்து நடந்தது தொடர்பாக படம் வரைந்து கொண்டிருந்தார்கள் அதற்கு சாட்சியாக நான் கையொப்பம் செய்தேன். பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். நான் கையெழுத்து செய்த பார்வை மகஜர் அ.சா,ஆ.2. என்னுடன் மகாலிங்கம் என்பவர் உடனிருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

விபத்தில் இறந்த சிலம்பரசன் எங்கள் ஊர்க்காரர். நான் ஊரிலிருந்து போது சிலம்பரசன் இறந்து விட்டதாக என்க்கு தகவல் வந்தது நான் மருத்துவமனை சென்றேன்.

நான் 11.30 மணிக்கு மருத்துவமனை சென்றேன். திரும்பி வரும்போது போலிசார் படம் வரைந்து கொண்டிருந்தார்கள். நான் ஒரு மணி நேரம் அங்கிருந்தேன். நான் விபத்தில் இறந்தவர் உடலுடன் சென்றேனா அல்லது தனியாக சென்றேனா என்று எனக்கு தெரியாது. மகாலிங்கம் என்னுடன் வந்தவர். சம்பவம் ராஜபாளையம் ரோட்டில் பாலத்திற்கு வலது புறம் திண்டுக்கல் பைபாஸ் ஏறும்இடத்தில் வலது புறம் நடந்தது என்றால் சரிதான். செண்டர் மீடியனுக்கும் திண்டுக்கல் பைபாஸ் ஏறும் இடத்திற்கும் நடுவில் விபத்து என்றால் சரிதான். அந்த இடத்தில் தான் விபத்து நடந்தது என்பதை ரத்தம் மற்றும் பைக் உடைந்த பாகங்கள் கிடந்தது. போலிசார் வந்து அதை கைப்ற்றிக்கொண்டார்கள். ரத்தம் கிடந்த இடத்த்தில் விபத்துநடந்ததாக தெரிந்துகொண்டேன். பைபாஸ் ரோடு ஏறும் இடம் என்பது எனக்கு வலதுபக்கம் என்றால் அது எனக்கு வடக்கு திசை.